**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்</u>**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

**தஞ்சாவூர்.**

**2023ஆம்ஆண்டு அக்டோபர் திங்கள் 6ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2054-புரட்டாசித் திங்கள்19 ஆம் நாள்)**

**<u>அசல் வழக்கு எண்.170/2021</u>**

**<u>CNR No:TNTJ010074612021 OS: 1702/2021</u>**

D. சாமிநாதன் **......வாதி**

**/எதிர்/**

S. கரிகாலன் **......பிரதிவாதி**

இவ்வழக்கு, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **15.9.2021** அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, **21.9.2021** அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு **29.9.2023** அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**S.மாணிக்கவேல்பாண்டியன்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு **T.A.புனிதன்** அவர்கள் முன்னிலையானபோதிலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், இவ்வழக்கினை இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

(1) வாதிக்கு, பிரதிவாதி ரூ.11,13,600/- ஐயும், அதில் அசல்தொகை ரூ.6.,00,000/- ஐ 9% பின்வட்டியுடன் கொடுக்க வேண்டுமென முதல்நிலை தீர்ப்பாணை வழங்க வேண்டுமென கோரியும், பிரதிவாதி அவ்வாறு தொகையை கொடுக்கத் தவறினால் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து தீர்ப்பாணைத் தொகையை வசூல்செய்துகொள்ள இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதி, வாதிக்கு செலுத்தக் கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்**

(2) பிரதிவாதி 28.7.2014 அன்று வாதியிடம் தாவா சொத்துக்களை அடமானம் வைத்து குடும்ப செலவுகளுக்காக ரூ.6,00,000/- அடமானக்கடனாக பெற்றார். அதே தேதியில் பிரதிவாதி வாதி பெயருக்கு மேற்படி தொகைக்கு அடமானக் கடன் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 24% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு, 28.2.1995 தேதியிட்ட தாவா சொத்துக்களின் அசல் கிரய ஆவணத்தை செக்யூரிட்டியாக பிரதிவாதி, வாதியிடம் கொடுத்து அசல் மற்றும் வட்டி தொகையை ஒரு வருட காலத்திற்குள் திரும்பக்கொடுத்துவிடுவதாக உறுதியளித்துள்ளார். அடமானக் கடன் தொகையை பிரதிவாதியிடம் கேட்டும் பிரதிவாதி தராமல் மறுத்து வருகிறார். மேலும் பிரதிவாதி தாவா சொத்துக்களை 3வது நபர்களுக்கு விற்பதற்கு முயற்சி செய்து வருவதை அறிந்து 7.3.2021 அன்று பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு

அனுப்பினார். 20.3.2021 அன்று பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு எந்தவிதபதிலும் தராமலும், அடமானக்கடன் தொகையும் தராமல் இருந்து வருகிறார். எனவே, வாதிக்கு, பிரதிவாதி ரூ.11,13,600/- ஐயும், அதில் அசல்தொகை ரூ.6.,00,000/ஐ 9% பின்வட்டியுடன் கொடுக்க வேண்டுமென முதல்நிலை தீர்ப்பாணை வழங்க வேண்டுமென கோரியும், பிரதிவாதி அவ்வாறு தொகையை கொடுக்கத் தவறினால் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து தீர்ப்பாணைத் தொகையை வசூல்செய்துகொள்ள இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதி, வாதிக்கு செலுத்தக் கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) இவ்வழக்கின் பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(4) **தீர்விற்குரிய பிரச்சினை யாதெனில்,**

**வாதிகோரிய படி வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>**

**(5)** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதி தனது வழக்குரையிலும் சாட்சியத்திலும், பிரதிவாதி 28.7.2014 அன்று வாதியிடம் தாவா சொத்துக்களை அடமானம் வைத்து குடும்ப செலவுகளுக்காக ரூ.6,00,000/- அடமானக்கடனாக பெற்றார் என்றும், அதே தேதியில் பிரதிவாதி வாதி பெயருக்கு மேற்படி தொகைக்கு அடமானக் கடன் பத்திரம் எழுதி பதிவு செய்து

கொடுத்துள்ளார் என்றும், மேற்படி தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 24% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு, 28.2.1995 தேதியிட்ட தாவா சொத்துக்களின் அசல் கிரய ஆவணத்தை செக்யூரிட்டியாக பிரதிவாதி, வாதியிடம் கொடுத்து அசல் மற்றும் வட்டி தொகையை ஒரு வருட காலத்திற்குள் திரும்பக்கொடுத்துவிடுவதாக உறுதியளித்துள்ளார் என்றும், அடமானக் கடன் தொகையை பிரதிவாதியிடம் கேட்டும் பிரதிவாதி தராமல் மறுத்து வருகிறார் என்றும், மேலும் பிரதிவாதி தாவா சொத்துக்களை 3வது நபர்களுக்கு விற்பதற்கு முயற்சி செய்து வருவதை அறிந்து 7.3.2021 அன்று பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், 20.3.2021 அன்று பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டு எந்தவிதபதிலும் தராமலும், அடமானக்கடன் தொகையும் தராமல் இருந்து வருகிறார் என்றும், எனவே, வாதிக்கு, பிரதிவாதி அசல்தொகை ரூ.6.,00,000/-ஐ 9% பின்வட்டியுடன் கொடுக்க வேண்டுமென முதல்நிலை தீர்ப்பாணை வழங்க வேண்டுமென கோரியும், பிரதிவாதி அவ்வாறு தொகையை கொடுக்கத் தவறினால் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை ஏலத்திற்கு கொண்டு வந்து தீர்ப்பாணைத் தொகையை வசூல்செய்துகொள்ள இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும், வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதி, வாதிக்கு செலுத்தக் கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது. வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும்பொருட்டு பெந்தகக் கடன் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், பிரதிவாதிக்கு சுப்பிரமணி என்பவர் எழுதிக்கொடுத்த சுத்தக்கிரய சாசனத்தின் அசல் வா.சா.ஆ.2 ஆகவும்,

வாதி வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும், அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.1 பெந்தகக் கடன் பத்திரத்திரத்திலிருந்து தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதும், வாதியிடம், பிரதிவாதி தனக்கு சொந்தமான சொத்தினை அடமானம் வைத்து ரூ.6,00,000/- கடன் பெற்றுக்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு 2.00 ரூபாய் வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டி தொகையை அந்தந்த ஆங்கில மாதம் முடிந்து அடுத்த மாதம் 22ஆம் தேதிக்குள் தங்களிடம் ரொக்கமாக கொண்டு வந்து கொடுத்து வரவு வைத்து கொடுத்து விடுவதாகவும், ஒரு வருட காலக்கெடு முடிந்தவுடன் கடன் தொகையை திருப்பிக்கொடுத்துவிடுவதாக எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும் மேற்படி கடன்தொகையை திருப்பிச்செலுத்தாததால் வாதி வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும் வா.சா.ஆ.3-லிருந்து தெரியவருகிறது. பிரதிவாதி வாதியின் வழக்கை மறுத்தோ, வாதியின் சாட்சியத்தை பொய்ப்பித்தோ நீதிமன்றத்தில் முன்னிலையாகி வழக்கை நடத்த முன்வரவில்லை. எனவே மேற்படி ஆவணங்கள் வா.சா.1ன் சாட்சியத்தை உறுதி செய்வதாகவும், வாதியின் வழக்கை நிரூபிப்பதாகவும் அமைந்துள்ளது. எனவே வாதி வழக்குரையில் கோரியவாறு ரூ.11,13,600/-ஐ பெற அருகதை உடையவர் என்றும், வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது எனவும் இந்நீதிமன்றம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

(6) முடிவாக, எதிரவரில்லா நிலையில் இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதி வழக்குரையில் கோரியுள்ள ரூ.11,13,600/-ஐயும், அதில் அசல் தொகை ரூ.6,00,000/-த்திற்கு வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% வட்டியுடனும் தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை செலுத்தப்படும் நாள் வரை 6% வட்டியுடனும் தாவா செலவுத் தொகையுடனும், பிரதிவாதி கொடுக்க வேண்டுமென முதல்நிலைத் தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. பிரதிவாதி தொகையை செலுத்துவதற்கு இன்றிலிருந்து 3 மாத கால அவகாசம் வழங்கப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6 ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

Digitally signed by
A MALARVIZHI

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும்**
**அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்.**

**வாதி தரப்பு சாட்சி**

வா.சா.1 - D. சாமிநாதன் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28.7.2014 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடமானக்கடன் பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.2 | 28.2.1995 | பிரதிவாதிக்கு சுப்பிரமணியன் என்பவர் எழுதிக்கொடுத்த சுத்தக கிரய சாசனம் |
| வா.சா.ஆ.3 | 7.3.2021 | பிரதிவாதிக்கு வாதி வழக்கறிஞர் அனுப்பிய |

| | | |
|---|---|---|
| | | வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் |
| வா.சா.ஆ.4 | -- | அஞ்சலக ஒப்புகை அட்டை |

Digitally signed by
A MALARVIZHI

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**

**நீதிபதி, தஞ்சாவூர்**

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அசல் வழக்கு எண்.170/2021</u>**

**<u>நாள்: 6.10.2023</u>**